# உடையார்

பாகம்-2



## பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்

# உடையார்

(இரண்டாம் பாகம்)

பாலகுமாரன்

**விசா பப்ளிகேஷன்ஸ்**
சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்
பழைய எண் : 28 புது எண்.13, சிவப்பிரகாசம் சாலை,
தி.நகர், சென்னை–600 017.
தொலைபேசி : 2434 2899, 24327696
பேக்ஸ் எண் : 91–44–24341559

## உடையார் இரண்டாம் பாகத்திற்கான

# முன்னுரை

இனிய ஸ்நேகிதங்களுக்கு,

வணக்கம்.

வாழிய நலம்.

சோறுடைத்த சோழநாட்டில் பிறந்தவர்களுக்கெல்லாமே பெரிய கோயில் என்று அழைக்கப்படும் பிரகதீஸ்வரர் கோவில் மீதும், அதைக்கட்டிய மாமன்னன் உடையார் ஸ்ரீ ராஜராஜத் தேவர் மீதும் மிகப்பெரிய மரியாதை இருக்கும். அடிமனதி லிருந்து காதல் பொங்கும். சோழநாட்டில் பிறந்தவர்களுக்கே என்றில்லை, யாரெல்லாம் சரித்திரத்தின் ரசிகர்களோ அவர்களுக்கெல்லாம் பிரமிப்பு ஊட்டக்கூடிய விஷயம்தான் ஸ்ரீ ராஜராஜ தேவரின் சாதனை.

கோயில் கட்டியது மட்டுமல்ல. அவர் நடத்திய அரசு பற்றியும், அவர் காலம் பற்றியும் மிகத் தெளிவான தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சேரர்களைப் பற்றியோ, பாண்டியர்களைப் பற்றியோ கிடைத்த தகவலைவிட ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நம் மண்ணில் மாவீரனாகத் திகழ்ந்த இந்த மன்னரைப் பற்றிய தகவல்கள் அதிகம் இருக்கின்றன. எவ்வளவு தூரம் எல்லைகளை விஸ்தரித்தார் என்பது வெகு எளிதாகவே தெரியவருகிறது. இவர் மீதும், இவர் கட்டிய கோயில் மீதும் ஆவல் கொண்டு பல சரித்திரப் பேராசிரியர்கள் இவரைப் பற்றி அறிவதிலேயே தங்கள் வாழ்நாளை செல விட்டிருக்கிறார்கள். மறுபடி மறுபடி இவரை யோசித்து கிறங்கிப்போய் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தக் கிறக்கத்தில் சிறிதளவு எனக்கும் ஏற்பட்டது.

மிகச்சிறிய வயதிலேயே பிரகதீஸ்வரர் கோயில் அருகே போய் நின்றபோது உடம்பெல்லாம் ஒரு விநோதமான உணர்வு ஏற்பட்டது. முற்பிறவி, பல ஜென்மங்கள் எடுக்கின்ற வாழ்க்கை என்றெல்லாம் அறியும் முன்னரே அத்தகைய ஒரு உணர்வுக்கு நான் ஆட்பட்டேன். இது என்னுடைய இடம். நான் வாழ்ந்த பூமி, நான் இருந்த இடம். என்னை மக்கள் மதித்த இடம் என்றெல்லாம் நான் நினைத்து நெகிழ்ந்திருக்கிறேன்.

உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவரின் லட்சோப லட்சம் வீரர்களில் நானும் ஒருவனாக இருந்திருக்கிறேன். அவரின் அந்தரங்க அதிகாரியாக பணியாற்றியிருக்கிறேன். அந்தண வீரனாக குறுக்கே பூணூலும்; இடுப்பிலே வாளுமாக நின்றிருக்கிறேன். நான் நின்ற இடம் இது. அமர்ந்த இடம் இது என்றெல்லாம் ஒரு பிரமையில் மூழ்கிப் போயிருக்கிறேன். என் வயது ஒத்த சிறுவர்கள் பிரஹதீஸ்வரர் கோயில் ஓடிப்பிடித்து விளையாட நல்ல இடம் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் நான் இரண்டாம் நுழைவாயிலில் நின்று அந்த விமானத்தையே வியப்போடு பார்த்துக்கொண்டிருப்பேன். இங்கு மிக ஆச்சரியமான ஒரு விஷயம். அந்த நந்தி என்னைக் கவரவேயில்லை. பிற்பாடு அந்த நந்திக்கும் ஸ்ரீராஜராஜ தேவருக்கும் எந்த சம்மந்தமில்லையென்று தெரிந்து கொண்டேன்.

சேனாதிபதி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் பற்றியும், வல்லவரையர் வந்தியத்தேவருடைய பெயர் பொறித்த கல்வெட்டு எங்கிருக்கிறது என்பதையும் நானாகவே கண்டு பிடித்தேன். பித்து பிடித்தது போல் கோயிலை சுற்றிச்சுற்றி வந்திருக்கிறேன்.

பிரம்மராயரின் ஊரான அமண்குடி என்கிற அம்மன்குடிக்கு பலமுறைபோய் வந்திருக்கிறேன். இன்றளவும் அந்த அம்மன்குடி மகாகாளி எங்கள் வீட்டு கூடத்திலே வீற்றிருக்கிறாள். மிகமிக லட்சணமான அந்த சிலையின் படம் என் வீட்டில் இருக்கிறது.

பெரியகோயில் மட்டுமல்ல அமண்குடியும், கருந்தட்டாங்குடியும், கீழ்ப்பழுவூரும், மேலப்பழுவூரும், பட்டிஸ்வரத்து துர்க்கை வீற்றிருக்கின்ற பழையாரை தெருக்களும் சோழன் மேடும், உடையார் குடியும், ராஜேந்திரசோழன் அகமும் நான் பலமுறை சுற்றிவந்த இடம். என்னுடைய இடம், நான் வாழ்ந்த பூமி என்று ஒரு குதூகலத்தோடு வலம்வந்த ஊர்கள் இவை.

இதைப் படிக்கின்ற வாசகர்களுக்கு லேசாக சிரிப்பு இருக்கலாம். பாலகுமாரன் சற்று கிறுக்குப் பிடித்தவன். அதீத கற்பனை வளம் உள்ளவன் என்று கேலி இருக்கலாம். ஆனால், என்னைப்போல, என்னைவிட அதிகம் படித்த அனுபவம்மிக்க சில நண்பர்களும் இதேவித பிரமையில் இருப்பதை நான் கண்டிருக்கிறேன்.